முருகப்பெருமான் துணை

**மகான் மயூரேசர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.08.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. பிரணவக் குடில் படைத்து அருளும்
   பிரணவ சித்திமிகு அரங்கனே
   சரவணச் சுடரேற்றி ஞானம்
   சகலருக்கும் அருளும் தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   ஆசிபட சோபகிருது நள்ளி திங்கள்
   ஆற்றல்பட எழுநான்கு திகதி கதிர்வாரம்
   (சோபகிருது வருடம் ஆடி மாதம் 28 ம் நாள், 13.08.2023, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் மயூரேசர் யானும்
   வளமுற உலகம் நலமுற உரைப்பேன்
   ஆரவாரம்பட அரங்கன் தருமம்
   அளவிலாப் பெருகி வருதலுற
4. வருகவே கலியின் பிடிகள்
   வலுவிழந்து தரும பலத்தால்
   பேருலகம் மாற்றம் காணும்
   புண்ணிய வழிகள் தன் குடியென காப்பதுடன்
5. காப்பாக உலகோர் எல்லாம்
   கண்டுத் தேறி கடைப்பிடித்து
   ஒப்புக்கொண்டு தருமம் வளர்த்து
   உலகமெலாம் அமைதி பாதுகாப்புடன்
6. காப்புடன் செயல்கள் அனைத்தும்
   கண்ணியமுற நடந்தேறும்
   தப்பான வழிச் செல்லும் தலைமைகளும்
   தவராஜன் ஆசி தீட்சைபெற
7. தீட்சைபெற மாற்றம் கண்டு
   திருந்தி ஞானவழிக்கு வந்து
   ஆட்சிதனை தருமஞானம் குன்றா
   அறத்தின் பலமோடு ஆள நேரும்

8. நேருமைபட ஆளும் சக்திகள்
நிலவுலகின் வளர்ச்சிக்காக
தருகின்ற செயல் திட்டங்கள்
தடைபடா தருமவழி பூர்த்தியாகி

9. ஆகியே அகிலத்தில் அனைத்தும்
அனைவருக்கும் நிறைவுபட
மகிழவே தேவைக்கு மேலாக
மண்ணுலகில் அருள்பொருள் வளமாகி

10. வளமாகி வையகமே செழிப்புறும்
வாழும் காலமே அரங்கனின்
பலமென்ன அவதார நோக்கமென்ன என
பண்பாலே சகலதும் தெளிந்து

11. தெளிந்து முழு சரணாகதி ஆகி
தெரிவிப்பேன் ஞானவான்களாக
பழிபாவமில்லாத மக்களாகி
பாருலகில் ஞான ஆட்சிபடைப்பர்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—